2017

2017

No. of Printed Pages : 5

401831 **6961**

*Register Number* | | | | | | | |

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**10x2=20**

**1.** செம்பொன் – இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

**2.** பொதுப் பெயர் என்றால் என்ன ? அவை யாவை ?

**3.** நான்காம் வேற்றுமை உருபுகள் எந்தெந்தப் பொருள்களில் வருமென எழுதுக.

**4.** ‘இம்மாடு யான் வாங்கியது’ - இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள வழுவமைதி யாது ? விளக்கம் எழுதுக.

**5.** தொழிற்பெயர் என்றால் என்ன ? அதன் வகைகளை விளக்குக.

**6.** ‘தாமரை முகம்’ என்பது எவ்வகை ஆகுபெயரெனச் சுட்டி, காரணத்தை எழுதுக.

**7.** கீழ்க்காணும் தொடரில் உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

‘‘கட்டுரையானது சுருங்கசொல்லல், விளங்க வைத்தல், நன்மொழிப் புணர்தல், கூறியதுக் கூறல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும்’’

[ Turn over

8. பறவைகளது கூட்டம், குமராவா – இத்தொடர்களில் இடம் பெற்றுள்ள வேற்றுமைகளைச் சுட்டியெழுதுக.

9. 'பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.'
– இக்குறட்பாவை உரைநடைப்படுத்தி எழுதுக.

10. அடுக்குத்தொடர் எந்தெந்தப் பொருள்களில் வருமென்பதை எழுதுக. காரணத்துடன் குறிப்பிடுக.

**II.** எவையேனும் **5** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200** வார்த்தைகளுக்கு விடையளிக்கவும். **5x4=20**

11. உடம்படுமெய் புணர்ச்சிக்குரிய நன்னூல் நூற்பாவினை எழுதி எடுத்துக் காட்டுடன் விளக்குக.

12. ''கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும் கைபுனைந்தியற்றும் அழகு அழியும் தன்மையது. 'கைபுனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு' என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன ? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன ? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன ? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர் ? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் யாவர் ? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி''
– இவ்வுரைப்பத்தியின் மையக்கருத்தையும் அருஞ்சொற் பொருள்களையும் எழுதுக.

13. கீழ்க்காணும் பாடலில் உள்ள செய்யுள் நயங்களை விளக்குக.

''கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்''

- பாரதிதாசன்.

14. பொருளற்றார், இளந்தமிழ்.

- இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

15. கீழுள்ள உரையாடலைச் செய்தியாக்குக.

குமணன் : புலவர் பெரும வரவேண்டும், தமிழன்னையின் கண்மணியே! வணக்கம்.

புலவர் : வள்ளல் பெருமான் வாழ்க! நாட்டில் கண்டுகளிக்க வேண்டிய நான், இன்று காட்டில் சந்திக்கின்றேன். இஃது என் பொல்லாத காலம்.

குமணன் : புலவரே! தங்களை இங்குக் காண நேர்ந்தது என் நல்ல காலம்! இந்நாள் எனக்கு ஒரு பொன்னாள்; நன்னாள்.

16. வழுவமைதி என்றால் என்ன ? இடவழுவமைதியை விளக்குக.

17. ‘எழில்மிகு குற்றாலம்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கான குறிப்புச் சட்டகம் கட்டுரையில் இடம் பெறும் வருணனைத் தொடர்கள் ஆகியவற்றை எழுதுக.

18. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதுக.

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

## பகுதி - ஆ

III. அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

19. மொழி மரபு சார்ந்தது என்பதற்கான விளக்கம் எழுதுக.

20. மொழியில் பால்வேறுபாடு வெளிப்படுவதற்கான எடுத்துக்காட்டுகள் நான்கினை எழுதுக.

21. மருங்கொலிகள் எவ்வாறு பிறக்கின்றன ? விளக்குக.

22. எழுதப்படும் வடிவமைப்பில் எழுத்துகளை எவ்வாறு வகைப்படுத்துவாய் ?

23. உரைநடை கற்பிப்பதில் மொழிமரபு பெறுமிடத்தை எழுதுக.

24. நடைமுறை இலக்கணம் என்பது யாது ?

25. செயல்திட்டத்தினை நிறைவேற்றுவதில் உள்ள நிலைகள் யாவை ?

26. பல்வகுப்புக் கற்பித்தலில் திறன் ஒருங்கிணைத்துக் கற்பித்தல் என்பதில் ஆசிரியரது பங்கு என்ன ?

27. அகராதி பார்த்துப் பொருளறியும் திறன் வளர்ப்பதன் நோக்கம் என்ன ?

28. செயல்வழிக் கற்றலில் பாடங்கற்பிப்புத் திட்டத்தின் கற்றல் படிகள் யாவை ?

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

29. மொழி, இலக்கியம், அழகுணர்ச்சி மூன்றும் பிரிக்க முடியாதவை என்பதை விளக்குக.

30. மாணவர்களுக்குப் பொருளுணர் ஆற்றலை வளர்க்கும் வழிமுறைகள் யாவை ?

31. உரைநடைப் பாடம் கற்பித்தலின் நோக்கங்களை எழுதுக.

32. நடிப்பு முறையில் மாணவர்களது திறன் வளர்க்கும் விதத்தை எழுதுக.

33. விதிவிளக்குமுறை, விதிவரு முறை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள் யாவை ?

34. உற்றுநோக்கலின் தேவை மற்றும் முறைகளை விளக்குக.

35. வகுப்பறைக் கற்பித்தலில் கற்பித்தல் குறிப்பின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

36. பாடம் கற்பிப்புத் திட்டத்தில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளாகக் குறிப்பிட வேண்டியவை யாவை ?

## பகுதி - இ

**V.** ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) 'மொழியையும் சமுதாயத்தையும் பிரிக்க முடியாது' என்பதை ஆராய்க.

அல்லது

(ஆ) 'தொடக்கப்பள்ளி மாணவர்களின் வகுப்பறைச் சூழலில் மொழி விளையாட்டுகள் சொற்களஞ்சியப் பெருக்கத்தை ஏற்படுத்துகின்றன.' – இக்கூற்றினை நிறுவுக.

**38.** (அ) இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள், கற்பிக்கும் முறைகள் குறித்துக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

அல்லது

(ஆ) 'கற்பித்தலைச் சிறப்பாக்கப் பாடம் கற்பிப்புத் திட்டம் இன்றியமையாதது.' – விவரித்து எழுதுக.

-o0o-